**தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை - 2021**

-----------------------------------------------------------------------------------------------------------

தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையின் 2021 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டின் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2006 இன் 17 ஆம் இலக்க தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 20(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. நிதிச் சட்டத்தின் 13(6) ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய 2021 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இந்த அறிக்கைத் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் அரசியலமைப்பின் 154(6) உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என கருதுகின்ற மீளாய்வாண்டின் அதிகார சபையின் செயற்படுநிலை தொடர்பாக எனது அவதானிப்புக்கள் மாத்திரம் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

**1.2 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் ஆளுனர் தரப்பினரினதும் பொறுப்புக்கள்**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் சகல கணக்காய்வு நடவடிக்கைகளும் மேற்கொள்கின்ற நிறுவனத்தால் அந்த நிறுவனம் தொடர்பாக வருடாந்த மற்றும் காலரீதியில் நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சுய வருமானம், செலவினம் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய பிரகாரம் பதிவேடுகள் மற்றும் அறிக்கைகள் பேணிச் செல்லப்படல் வேண்டும். அந்த சட்டத்தின் 16(2) இன் பிரகாரம் சகல கணக்காய்வு நடவடிக்கைகளும் மேற்கொள்கின்ற நிறுவனம் தொடர்பான வருடாந்த நிதிக்கூற்றுக்கள், விதிகளின் மூலம் காண்பிக்கின்ற வகையில் காலஎல்லையில் அந்த நிறுவனங்களின் வருடாந்த செயலாற்றல் அறிக்கையுடன் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அந்த சட்டத்தின் 38(1)(ஈ) பிரிவின் பிரகாரம் ஆண்டறிக்கை மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்கள் தேவையான நேர காலத்தில் தயாரிப்பதை உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன், அதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனத்திற்குரிய ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் கணக்காணித்துக் கொள்ளல் வேண்டும்.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக் கூற்றுக்கள் மற்றும் வரைவு ஆண்டறிக்கை என்பன கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்குரிய நிதிக்கூற்றுக்கள் இந்த அறிக்கை திகதி வரையிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2 சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவினம்**

அதிகாரசபையினால் இறுதியாக தயாரித்த 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானங்கள் மற்றும் செலவினங்கள் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| **நிதிக்கூற்றுக்களின் விடயங்கள்** | **பெறுமதி** |
|---|---|
| | ரூபா |
| சொத்துக்கள் | |
| நடைமுறையல்லா சொத்துக்கள் | 7,476,170 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 154,219,287 |
| ஏனைய நடைமுறைச் சொத்துக்கள் | 561,941 |
| **மொத்த சொத்துக்கள்** | **162,257,398** |
| உரிமை மூலதனம் மற்றும் பொறுப்புக்கள் | |
| உரிமை மூலதனம் | 49,798,341 |
| பொறுப்புக்கள் | |
| நடைமுறையல்லா பொறுப்புக்கள் | 5,919,000 |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 106,540,060 |
| **மொத்த பொறுப்புக்கள்** | **162,257,401** |
| மொத்த வருமானம் | 33,245,125 |
| மொத்த செலவினம் | 29,599,492 |
| **மிகை** | **3,645,633** |

### 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | | **இணங்காமை** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **பரிந்துரை** |
|---|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | | |
| நிதிப் பிரமாணம் | (i) | 2015 முதல் 2019 வரையான | இது தொடர்பாக தற்போது ஆரம்ப | நிதிப் பிரமாணத்தின் |

| | | | | |
|---|---|---|---|---|
| 103 மற்றும் 104 | | காலப்பகுதியில் அதிகாரசபைக்கு சொந்தமாக காணப்பட்ட ரூபா 203,890 பெறுமதியான இரண்டு லெப்டொப் கணனிகள் மற்றும் ரூபா 61,900 பெறுமதியான இரண்டு டெப் கணனிகள் என்பன தொலைந்து போயிருந்த போதிலும், அது தொடர்பாக நிதிப் பிரமாணம் 103 மற்றும் 104 இன் பிரகாரம் மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | விசாரணைகள் 2020.09.09 இற்கு அண்மித்த திகதிகளில் நடாத்தப்பட்டு மேலதிக விசாரணைகளுக்காக முகாமைத்துவத்தின் ஆலோசனையின் அடிப்படையில் நாரஹேன்பிட்ட பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த பொலிஸ் அறிக்கை இது வரையிலும் கிடைத்திருக்கவில்லை. பொலிஸ் அறிக்கை கிடைத்தவுடன் சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படும். | பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| | (ii) | PD – 6379 ஆம் இலக்க கெப் வண்டி 2020 ஆம் ஆண்டின் போது தலைவரால் ஓட்டிச் செல்லும் சந்தர்ப்பத்தில் நீர் போதியளவில் இடாமையினால் வாகனத்தின் என்ஜினுக்கு பாதிப்பு ஏற்பட்டிருந்தது. அது தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் பழுதுபார்ப்பதற்கு செலவாகிய ரூபா 498,110 தொகையை தலைவரிடமிருந்து அறவிட வேண்டும் என பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. எனினும் அந்த தொகையை அறவிடுவதற்கு அதிகாரசபையினால் மீளாய்வாண்டின் | தலைவரிடமிருந்து பழுதுபார்த்தலுக்கு உரியதாக அறவிடவேண்டிய ரூபா 498,110 பணத்தை வழங்குமாறு அறிவித்து பதிவுத் தபாலில் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அந்த கடிதத்திற்கு இதுவரை பதில் கிடைக்காமையினால் சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள தொகை அறவிடப்படல் வேண்டும். |

போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2006 இன் 17 ஆம் இலக்க தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவது தொடர்பில் 2021 ஆம் ஆண்டின் போதும் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| (i) சட்டத்தின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக வெளிநாட்டு சந்தைகளில் வெற்றியீட்டக்கூடிய உள்நாட்டு தொழில் முயற்சிகளை சர்வதேசமயப்படுத்தும் நோக்கில் தொழில் முயற்சிகளை இலங்கைக்கு வெயியில் அமைத்தல் மற்றும் அமுல்படுத்துவதை ஆர்வமூட்டுவதற்காக ஊக்குவித்தல். | விசேடமாக 2019 ஆம் ஆண்டு முதல் “Made in Sri Lanka ” வர்த்தகத் தலைப்பில் உள்நாட்டு உற்பத்தியாளர்களின் உற்பத்திகளை உள்நாட்டு சந்தையைப் போன்று வெளிநாட்டு சந்தைகளுக்கும் எடுத்துச்செல்வதற்கான இயலுமை ஏற்பட்டிருந்ததுடன் அதன் மூலம் அந்த உற்பத்திகளை சந்தைப்படுத்துவதற்கான சந்தர்ப்பம் உருவாகியிருந்தது. அவ்வாறே “Made in Sri Lanka” அதிகாரம் பெற்ற விற்பனைக் கடைகளை இலங்கையில் ஸ்தாபிப்பதற்கு அதிகாசபை திட்டமிட்டிருந்ததுடன் அதன் மூலம் உள்நாட்டு உற்பத்தியாளர்களை நேரடியாக வெளிநாட்டு சந்தையுடன் தொடர்பொன்றை கட்டியெழுப்புவதற்கான கருவியொன்றாக சந்தைச் | சட்டத்தின் நோக்கங்கள் நிறைவேற்றப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | சந்தர்ப்பங்கள் உருவாகியிருந்தது. 2020 மற்றும் 2021 என்ற ஆண்டுகளில் நாடு முழுவதும் காணப்பட்ட கொவிட் தொற்று நோயினால் நிகழ்ச்சித் திட்டங்களில் ஏதோவொரு வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது. | |
| (ii) | தொழில்நுட்ப விருத்தி, உற்பத்தி அபிவிருத்தி மற்றும் பேடன்ட் உரிமையின் வணிகமயப்படுத்தலுக்குரிய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மேம்படுத்தலுக்காக தொழில்நுட்ப அபிவிருத்தி நிதியமொன்றைத் தாபித்தல். | நிறுவனத்தால் பிரதேச தொழில்முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் தொழில் முயற்சியாளர்களின் தொழில்நுட்ப விருத்தி, உற்பத்தி அபிவிருத்தி மற்றும் பேடன்ட் உரிமையைப் பெற்றுக்கொள்ளல் போன்ற சந்தர்ப்பங்கள் எழுந்திருந்தன. மேலும் “Made in Sri Lanka ”வர்த்தக தலைப்பின் மூலமும் தொழில் முயற்சியாளர்களின் தொழில்நுட்ப விருத்தி, உற்பத்தி அபிவிருத்தி போன்ற பணிகளும் நிறைவேற்றப்படுகின்றது. தொழில்நுட்ப அபிவிருத்தி நிதியத்தைத் தாபித்தல் இதுவரையிலும் தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | சட்டத்தின் நோக்கங்கள் நிறைவேற்றப்படல் வேண்டும். |

## 3.2 முற்பண கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட ரூபா 372,281 தொகையும், 2018 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட ரூபா 425,130 தொகையும், 2019 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட ரூபா 902,552 தொகையும், 2020 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட ரூபா 14,000 தொகையும் ஆன முற்பணங்கள் கணக்காய்வுத் | இந்த முற்பணங்கள் பிரதேச செயலகங்களினாலும், மாவட்ட செயலகங்களினாலும் அமுல்படுத்தப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டங்களுக்காக வழங்கப்பட்டவையாகும். முற்பணங்களைத் | உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்ட முற்பணம் வழங்கப்பட்ட பணி நிறைவுபெற்றவுடன் தீர்த்து வைக்கப்படுவதை கண்காணித்துக் கொள்ளல் |

| | | |
|---|---|---|
| திகதி வரையிலும் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தீர்த்துவைப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் கணக்காண்டின் போது முற்பணக் கணக்கின் பெறுமதியை பூச்சியப் பெறுமதியாக பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வேண்டும். |

### 3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கைத்தொழில் மற்றும் வணிக அலுவல்கள் அமைச்சின் 2018 ஆம் ஆண்டிற்குரிய செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் அதிகாரசபை ஊடாக Know How இளைஞர் தொழில் முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்தப்படுத்து வதற்காக அமைச்சின் மூலம் வழங்கப்பட்ட முற்பணத் தொகையை விஞ்சி ரூபா 2,605,147 தொகை 2019 ஆம் ஆண்டின் போது செலவிடப்பட்டிருந்த போதிலும் மேலதிகமாகச் செலவிடப்பட்ட பணத்தை மீளளிப்புச் செய்து கொள்வதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | Know How நிகழ்ச்சித் திட்டத்திற்காக மேலதிகமாகச் செலவிடப்பட்ட பணத்தைப் பெற்றுக்கொள்வதற்கு 2019 ஆம் ஆண்டில் கோரப்பட்ட போதிலும் கைத்தொழில் மற்றும் வணிக அலுவல்கள் அமைச்சில் இருந்து பணம் கிடைத்திருக்கவில்லை. | அதிகாரசபைக்கு மீளளிப்பு செய்யப்பட வேண்டிய பணம் தாமதமின்றி மீளளிப்புச் செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) அதிகாரசபைக்கு ISO சான்றிதழை பெற்றுக் கொள்வதற்காக 2016 ஆம் ஆண்டில் ரூபா 71,762 தொகையும், 2017 ஆம் ஆண்டில் ரூபா 125,000 தொகையும், 2018 ஆம் ஆண்டில் ரூபா 35,880 | ISO சான்றிதழை பெற்றுக் கொள்ளல் முன்னாள் காணப்பட்ட பணிப்பாளர் சபையால் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது. | ISO சான்றிதழை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

தொகையும் ஆக கூட்டுமொத்தமாக ரூபா 232,142 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போதும் ISO சான்றிதழ் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.